**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

# O.S. No.162/2019

2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 15 - ம் நாள் வாதி தரப்பு வா.சா. 1 சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி .A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ) அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 15.03.2024**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | மணிமேகலை | ஜாதி | : |
| க /பெயர் | : | சிவசுப்ரமணியம் | மதம் | : |
| கிராமம் | : | | தொழில் | : |
| வட்டம் | : | | வயது | : |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வழக்கு தாக்கல் செய்துள்ள தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 4 செண்ட் ஆகும். எந்த சர்வே எண்ணின் திட்ட விஸ்தீரணம் 1 ஏக்கர் 4 செண்ட் என்றால் புல எண்.325/5 மற்றும் 327/5 ஆகும். சாட்சி மீண்டும் புல எண்.327/3 பி என்று கூறுகிறார். புல எண்.325/5-ல் 19 செண்ட், சர்வே எண் 327/3 பி-ல் 85 செண்ட் ஆகும். புல எண்.325/5-ல் மொத்த திட்ட விஸ்தீரணம் 57 குழியாகும். புல எண்.327/3 பி மொத்த திட்ட விஸ்தீரணம் 2 1/2 ஏக்கர் ஆகும். வழக்குரையில் ஏ அட்டவணை மற்றும் பி அட்டவணை இரண்டு சொத்து விவரங்கள் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஏ அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள புல எண்களை பி அட்டவணை சொத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்

2. பி அட்டவணை சொத்தில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் பாசனம் செய்வதற்கு விடாமல் தடை செய்து வருகிறார்கள். புல எண். 325/5 -ல் உள்ள சொத்திற்கு மேற்கு பக்கத்தில் யாருடைய சொத்து உள்ளது என்றால் பிரதிவாதி மாரிமுத்துக்கு சொந்தமான இடம் உள்ளது. சாட்சி மீண்டும் மேற்கு பக்கத்தில் மணிமாறன் சொத்து உள்ளது என்று கூறுகிறார். அதற்கு அடுத்து மேற்கு பக்கம் மேட்டு வாய்க்கால் உள்ளது. மேட்டு வாய்க்கால் என்பது ஆரம்பத்தில் பாமணியாற்றியிலிருந்து பிரித்து வருகிறது என்று சொன்னால் சரிதான். மேட்டு

வாய்க்காலிருந்து யோகேஷ்வரன் நிலத்திற்கு தண்ணீர் பாய்ந்து அதிலிருந்து எனக்கு சொந்தமான புல எண்.325/5-க்கு தண்ணீர் வரும் என்றால் சரியல்ல. பிரதிவாதி நிலத்திற்கு தண்ணீர் வந்தபிறகு தான் அவரது நிலத்திலிருந்து தான் எனக்கு சொந்தமான புல எண். 325/5 நிலத்திற்கு தண்ணீர் வரும். அதை பிரதிவாதி தடை செய்து வருகிறார்.

3. பிரதிவாதி நிலத்திலிருந்து எங்களுக்கு தண்ணீர் வராது என்று சொன்னால் சரியல்ல. புல எண்.325/5-ல் முழுவதும் குட்டையாக மாறிவிட்டது என்றால் சரியல்ல. ஒரு பகுதி குட்டையாக உள்ளது. மற்றொரு பகுதியில் விவசாயம் செய்து வருகிறேன். நான் மற்றொரு பகுதியில் விவசாயம் செய்யவில்லை என்றாலும், குட்டையிலிருந்து மண்ணை எடுத்து மற்றொரு பகுதியில் போட்டு மேடாக்கி அந்த வீடு கட்டி வருகிறேன் என்றால் சரியல்ல.

4. புல எண். 325/5-ல் நான் சாகுபடி செய்யவில்லை என்றால் சரியல்ல. புல எண்.325/5 க்கு வடக்கு பகுதியில் மாரிமுத்து நிலம் உள்ளது. அவர் நிலத்தில் வாய்க்கால் உள்ளதாக சொல்லியதற்கு வருவாய் ஆவணங்கள் ஏதேனும் இருந்து இருந்தால் பட்டா கன்னி என குறிப்பிட்டு வருவாய் ஆவணங்களில் சொல்லியிருப்பார்கள் என்றால் சரிதான். பொக்கன் வாய்க்காலிருந்து மாரிமுத்து நிலத்திற்கு தண்ணீர் வந்து பிறகு எனக்கு சொந்தமான புல எண்.325/5 சொத்திற்கு எந்த காலத்திலும் தண்ணீர் வந்தது கிடையாது என்றாலும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. எனது சொத்திற்கு வடக்கு பக்கம் பிரதிவாதி மாரிமுத்துக்கு சொந்தமான நிலம் உள்ளது. மாரிமுத்து நிலத்திற்கு மேற்கு பக்கம் வாய்க்கால் உள்ளது. அந்த மேட்டு வாய்க்கால் வழியாக தான் பிரதிவாதி மாரிமுத்து நிலத்திற்கு தண்ணீர் பாய்கிறது என்றாலும், நான் சொல்வதுபோது பொக்கன் வாய்க்காலிருந்து பிரதிவாதி நிலத்திற்கு தண்ணீர் பாசனம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி நிலத்திற்கு வடக்கேயுள்ள பொக்கன் வாய்க்கால் என்பது மேட்டு வாய்க்காலில் வந்து சேருகிறது என்றால் சரிதான்.

6. மேற்கண்ட விவரங்களை வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து, பார்வையிடுவதற்கு ஏதேனும் முயற்சி செய்தேனா என்றால் மனு கொடுத்துள்ளோம். அவ்வாறு மனு ஏதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புல எண்.325/5 இடத்திற்கு தெற்கில் தார் ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த தார் ரோட்டிற்கும்

நான்கு ரோடு செல்லும் சாலை என்று பெயரிலுள்ளது என்றால் சரிதான். எனது இடத்திற்கும் யோகேஷ்வரன் இடத்திற்கும் நடுவில் பிரதிவாதி மாரிமுத்து நிலத்திலிருந்து வரக்கூடிய தண்ணீர் வடிவதற்கு ஒரு வாய்க்கால் உள்ளது என்றால் இல்லை. மேற்படி வாய்க்கால் வழியாகத்தான் பிரதிவாதி வயலிருந்து வரும் தண்ணீர் வடியவேண்டும் என்றால் சரியல்ல.

7. ரோட்டிற்கு கீழ்புறத்தில் தெற்கு பக்கத்தில் தண்ணீர் வடிவதற்கு ஒரு குழாய் போடப்பட்டு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் முன்னர் இருந்தது. தற்போது ரோடு போட்டதால் அது மூடப்பட்டு விட்டது. புல எண்.327/3 பி-. நிலத்தை நான் காந்திமதி என்பவரிடமிருந்து வாங்கினோம். அந்த சொத்திற்கு நான்கெல்லை ரோட்டிற்கு தெற்கு, கணபதி நஞ்சைக்கு கிழக்கு, பாசன கன்னிக்கு வடக்கு, ராமையன் வசந்தா பட்டா கன்னிக்கு மேற்கு ஆகும். மேட்டு வாய்க்கால் பாமணியாற்றிலிருந்து வந்து என் நிலத்திற்கு தெற்கில் திரும்புகிறது என்றால் எனது கணவர் வயலுக்கு போவார். நான் எப்போதாவது தான் போவேன். என் நிலத்திற்கு தெற்கில் ஒரு பாசன வாய்க்கால் இருக்கிறது என்றால் சரிதான். புல எண்.327/3 பி-ல் பாசன கன்னிக்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாசன கன்னி வழியாகத்தான் என்னுடைய புல எண்.327/3 பிக்கு பாசன தண்ணீர் வரவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

S/d.A.Seethalakshmi,
District Munsif
Mannargudi.